**தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம்,**
**சைதாப்பேட்டை, சென்னை 600 015**
**சுற்றறிக்கை எண் 05/2017 நாள்: 26.10.2017**

பொருள் : ஆதார் எண்ணை அவரவர் வங்கி மற்றும் வருங்கால வைப்பபுநிதி கணக்கில் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்த மாதாந்திர பங்கு தொகையை செலுத்தவும் மற்றும் கணக்கை முடிக்க – உத்ஜீதம் செய்வது – தொடர்பாக.

பார்வை : வருங்கால வைப்பபுநிதி ஆணையர் அவர்களின் கடித எண் CIU.011(44)2016/Aadhar /10273 நாள் 22.09.2017.

************

சுற்றறிக்கை எண் 04/2017 நாள் 03.10.2017 –ன்படி ஏற்கனவே அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அவரவர் ஆதார் எண்ணை அவரவர் வங்கி கணக்கு எண்ணுடன் இணைக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. அதேபோல் பார்வையில் உள்ள வருங்கால வைப்பபுநிதி ஆணையர், புது டெல்லி அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி வருங்கால வைப்பபுநிதி கணக்கில் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்த மாதாந்திர பங்கு தொகையை செலுத்தவும் மற்றும் கணக்கை முடிக்கவும், கீழ்கண்டவற்றை படைவிலகல் சான்றுடன் (Discharge Book) சரிபார்க்க வேண்டும் :–

(அ) தனியரின் பெயர்

(ஆ) இனிஸியல்

(இ) பெயர் மற்றும் இனிஸியல் இவை இரண்டுக்கும் உள்ள இடைவெளி (space), புள்ளி, மற்றும் கமா உட்பட

(உ) பெயரிலும் இடைவெளி (space), புள்ளி, மற்றும் கமா உட்பட இருக்குமாயின் அதையும் சரி செய்யவும்

(உ) இனிஸியல் பெயருக்கு முன்னால் உள்ளதா அல்லது பின்னால் உள்ளதா என்பதையும் சரிபார்க்கவும்

(ஊ) இனிஸியல் பதிலாக அப்பாவின் பெயர் இருந்தால் அவை முன்னால் உள்ளதா அல்லது பின்னால் உள்ளதா என்பதையும் சரிபார்க்கவும்

அவ்வாறு ஏதாவது வித்தியாசம் இருப்பின் ஆதார் அட்டையை இ–சேவை மையம் மூலம் சரிசெய்து வருங்கால வைப்பபுநிதி கணக்கில் மற்றும் வங்கி கணக்குடன் ஊர்ஜிதம் செய்யுமாற கேட்டுக் கொள்ளப்படுகிறீர். புதிதாக நேர்காணலுக்க வரும் நபர்கள் ஆதார் அட்டையில் மேற்காணும் வித்தியாசங்களை சரிசெய்த ஆதார் அட்டையுடன் வந்தால் மட்டுமே நேர்காணலுக்கு அனுமதிக்கபடுவீர்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இப்பொருள் குறித்து உதவி மேலாளர்கள் அனைவரும் பல திட்டங்களில் பணிபுரிந்து வரும் திட்ட பணியாளர்களுக்கு நினைவூட்டி வருங்கால வைப்பபுநிதி மற்றும் வங்கியின் கோரிக்கையை நடைமுறைப்படுத்தவும், புதிதாக நேர்காணலுக்கு வரும் நபர்களுக்கும் தெரிவிக்குமாறும், இதில் ஏற்படும் கால தாமதத்திற்கு தனியரே பொறுப்பாவார். இதனால், அக்டோபர் மாதம், 2017–க்கான வருங்கால வைப்புநிதி தொகையினை கால தாமதமின்றி செலுத்த ஏதுவாக மேற்காணும் திருத்தங்களை மேற்க்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கையை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை உடன் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

26.10.17

**பொது மேலாளர்**

**பெறுநர் :**

**அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்**

**தகவல் பலகை**

/circular/